## 50. இம்மட்டும் வா மிஞ்சி வராதே

**பல்லவி**

இம்மட்டும் வா மிஞ்சி வராதே (2)

**அனுபல்லவி**

*உன் அலைகளின் பெருமைகளை*
*அடக்கி அமர்த்திடுவார்*
*என்னில் இருப்பவரோ மிகவும் பெரியவரே*

**சரணங்கள்**

1. என் திராணிக்கு தக்கதாக
பரிசோதிக்கும் நல்ல தேவன்
எனக்காக யாவற்றையும்
செய்து முடித்திடுவீர்
- இம்மட்டும் வா

2. யோபுவின் சோதனையில்
உதவிட்ட வல்ல தேவன்
என் சோதனையில் உதவுவார்
ஜெயம் பெற்று எழுந்திடுவேன்
- இம்மட்டும் வா

3. என்னோடு யுத்தம் செய்தவர்கள்
நான் தேடியும் காணமாட்டேன்
என்னோடு போராடினவர்கள்
இல்பொருளாவார்கள்
- இம்மட்டும் வா